# கொடி பீன்ஸ்... மானாவாரியில் ஒரு மகத்தான சாகுபடி!

## 25.10.2013




காய்கறி விவசாயம் எப்போதுமே கைவிடாது, என்பதை அனைத்து விவசாயிகளுமே நன்கு புரிந்து வைத்திருப்பர். ஆனால் பாசன வசதி இருந்தால் மட்டுமே காய்கறி விவசாயம் சாத்தியப்படும் என்று பலரும் எண்ணிக் கொண்டிருக்கும் வேளையில்... கர்நாடக மாநிலம், சாம்ராஜ் நகர், கொள்ளேகால் பகுதி விவசாயிகள் மானாவாரியில் பூண்டு, உருளைக்கிழங்கு, கேரட், பீன்ஸ்.. என காய்கறிகளை சாகுபடி செய்து கலக்கி வருகிறார்கள். இப்பகுதிகளில் கிடைக்கும் பருவமழை. அதிகளவில் வெயிலும், குளிரும் இல்லாத மிதமானச் சூழல் ஆகியவற்றை சரியாகப் பயன்படுத்துவதான் இவர்களின் வெற்றிக்கான சூத்திரம்!

கர்நாடக மாநிலம், உடையார்பாளையம் பகுதியைச் சேர்ந்தவர், ராபர்ட். இவர். கேழ்வரகு , கொடி பீன்ஸ் ஆகியவற்றை சாகுபடி செய்து வருகிறார். பூர்வீகமே இந்த ஊர்தான். இரண்டு ஏக்கர் நிலம் இருக்கு. 40 வருடத்திற்கு முன் கேழ்வரகு மட்டும்தான் பிரதானப் பயிராக இருந்தது. இரண்டு போக வெள்ளாமை நடக்கும். பயிருக்கு நீர் பாய்ச்சும் வேலையே இருக்காது. நேரத்துக்குப் பெய்யும் மிதமான மழையே போதுமானதாக இருக்கும்.

இப்பவும் இங்கு நிறைய பேர் வீட்டில் கேழ்வரகு களி, தோசை சமைத்து சாப்பிடுகிறார்கள். ஆனால், காலப்போக்கில் நிறைய பேர் கேழ்வரகு பயிர் செய்வதை குறைத்துக் கொண்டு, காய்கறி விவசாயத்திற்கு மாறிவிட்டார்கள். அதே சமயம், ஒரு போகம் மட்டும் கேழ்வரகு போடுவதை எல்லாருமே வழக்கமாக வைத்திருக்கிறோம். நான் கேழ்வரகுடன் சேர்த்து, 25 சென்டில் கொடி பீன்ஸையும் சாகுபடி செய்து கொண்டிருகிறேன்.

### பூச்சித் தாக்குதல் இல்லை!

வருடம் முழுவதும் மிதமான சீதோஷ்ணம் இருப்பதால் பயிருக்கு எந்த நோயும் வருவதில்லை. பூக்கள் உதிராது. பூச்சிகளும் வருவதில்லை. அதனால், பூச்சிக்கொல்லி பயன்பாடும் குறைவுதான். இருந்தாலும் காய்பருவத்தில் முன்னெச்சரிக்கையாக, வேம்பு – பூண்டு கரைசலை ஒரு முறை தெளித்து விட்டுவிடுவோம். இங்கே எல்லாரும் பூண்டு பயிர் செய்வதால்... அந்த காரமான வாசம் காத்தில் வீசிக்கொண்டே இருக்கும். அதனால், பூச்சிகள் வரவே வராது. அதேசமயம்... சாலைகளில் சரக்கொன்றை மரங்களும், அதிக பூ பூக்கும் காட்டுச் செடிகளும் இருப்பதால் தேனீக்கள் அதிகளவில் இருக்கும். அதனால் மகரந்தச் சேர்க்கை நன்றாக நடந்து மகசூல் கூடுகிறது என்றார் ராபர்ட்.

மழைக்கால விதைப்பு பருவ மழை தொடங்கும் ஜீன் முதல் வாரம் விதைப்புக்கு ஏற்றப் பருவம். 2 அடி அகலம், 100 அடி நீளம் என்ற அளவிற்கு பாத்திகளை அமைத்துக் கொள்ள வேண்டும். பாத்திகளுக்கான இடைவெளி நான்கு அடி. பாத்தியில் அரை அடி விட்டம், அரை அடி ஆழத்திற்கு குழி எடுத்து... அதில், அரை கிலோ மேல் மண்ணுடன் அரை கிலோ ஆட்டு எருவைக் கலந்து இட்டு, குழிக்கு மூன்று விதை என்கிற கணக்கில் கொடி பீன்ஸ் விதைத்து மண் கொண்டு மூட வேண்டும் (கால் ஏக்கருக்கு 750 கிராம் விதை தேவைப்படும்). தொடர்ந்து 6 அடி உயர மூங்கில்களை, 8 அடி இடைவெளியில் நட்டு வைக்க வேண்டும். 2 அடி அளவுக்குக் குழி எடுத்து நட்டு வைத்தால், உறுதியாக நிற்கும். மூங்கில்களை இணைத்து, கோணி தைக்கும் 'பிளாஸ்டிக் ட்வைன்" கயிறை வைத்து, சுவர் போல் வலைப்பின்னல் போட வேண்டும். இது நெடும்பந்தல். கால் ஏக்கர் அளவுக்கு இப்படி அமைத்து, 48 மூங்கில் மற்றும் 10 கிலோ 'ட்வைன்' கயிறு தேவைப்படும்.

### 60-ம் நாளில் உரம்!

பருவமழை தொடங்கும் காலம் என்பதால், பாசனம் பற்றி கவலைப்படத் தேவையில்லை. மழை கிடைக்காத பகுதியில் சாகுபடி செய்பவர்கள், பாசனம் செய்யலாம். களைகள் மண்டுவதைப் பொருத்து அவற்றை அகற்ற வேண்டும். விதைத்த குழியைச் சுற்றி இருக்கும் களைகளை மட்டும் அப்புறப்படுத்தினால் போதும். விதைத்து 30-ம் நாளுக்கு மேல், கொடி படரத் தொடங்கும். அவற்றை பந்தலில் படரவிட வேண்டும். 60-ம் நாளில் ஒவ்வொரு குழிக்கும் அருகில் 2 கிலோ அளவுக்கு காய்ந்த ஆட்டு எருவை இட வேண்டும். 100-ம் நாளில் இருந்து பீன்ஸை அறுவடை செய்யலாம். வாரம் ஒரு முறை முற்றிய காய்களை மட்டும் பறிக்க வேண்டும். தொடர்ந்து 8 வாரம் வரை பறிக்கலாம்.

### 500 கிலோ மகசூல்!

நிறைவாக மகசூல் மற்றும் வருமானம் பற்றி பேசிய ராபர்ட், ஒரு பறிப்புக்க 60 கிலோவுக்கு மேல் கிடைக்கும். 8 பறிப்பிற்கும் சேர்த்து கால் ஏக்கரிலிருந்து 500 கிலோ அளவுக்கு மகசூல் கிடைக்கும். கிலோ 35 ரூபாய் என்று விலை போகிறது. மொத்தம் 17 ஆயிரத்து 500 ரூபாய் வருமானம் கிடைக்கும். 4 ஆயிரம் ரூபாய் செலவு போக, 13 ஆயிரத்து 500 ரூபாய் லாபம்.
எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்த ரசாயன உரத்தைத் தொட்டதேயில்லை. பூச்சி, நோய்களிலிருந்து பயிரைக் காப்பாற்றுவதும் சரி, பயிருக்குத் தேவையான ஊட்டத்தைக் கொடுப்பதும் சரி.. எல்லாமே இயற்கைதான். அந்த இயற்கைச் சூழலை பங்கமில்லாமல் அடுத்த தலைமுறைக்கும் சேர்த்துவிடனும் என்பதுதான் என்னுடைய ஆசை என்றார்.

---

**தொடர்புக்கு**

**ராபர்ட், செல்போன் : 097393-15323**

***ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 25.10.13 www.vikatan.com***